1968 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கடந்த அரசாங்கம் அப்படி செய்தது உண்மை; இந்த அரசாங்கமும் அப்படியே செய்து கொண்டு வருகிறது. அதுதான் சரியான கொள்கை என்றும் கருதுகிறது.

பவநகர் நிதி

* 88 வின—**திரு. வி. கே. கோதண்டராமன்** : மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :

பவநகர் நிதியிலிருந்து காச நோயாளிகளுக்கு மட்டும் உதவி செய்யப்படுகிறதா ? அல்லது வேறு என்னென்ன வகை நோயாளிகளுக்கு உதவி அளிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பவநகர் நிதியிலிருந்து ஆண்டு வருமானம் ரூபாய் 1,500.00-க்கு மேற்படாமலும் மருத்துவ மனையிலோ அல்லது உடல் நலம் பெறும் மனையிலோ தங்கி சிகிச்சை பெறாத காச நோயாளிகளுக்கு மட்டும் உதவி அளிக்கப்படுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், காச நோயாளிகளுக்கு எப்படி உதவி அளிக்கப்படுகிறதோ, அதே மாதிரி, தொழுநோய், அதாவது லெப்ரஸி, வியாதியால் வருந்துகிறவர்களுக்கும் உதவி செய்யக் கூடிய அளவிற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதிலே உதவி அளிக்க காச நோயாளிகளுக்கு மட்டும்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தொழு நோயாளிகளுக்கு உதவியளிக்க இடம் இல்லை.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : நோயாளிகளுக்கு மாதந்தோறும் எவ்வளவு ரூபாய் உதவியாகக் கொடுக்கப்படுகிறது என்று தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ரூ. 1,500-க்கு மேல் வருமானம் இல்லாதவர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ. 10 என்று கொடுக்கப்படுகிறது.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாவலாக காச நோயாளிகளுக்கு என்று ஒதுக்கப்பட்டிருப்பதால் மருத்துவ மனைகளில் தங்கி அவர்கள் சிகிச்சை செய்துகொள்ள முடியவில்லை. ஆகவே, இருக்கின்ற மருத்துவ மனைகளில் படுக்கைகளை அதிகரிக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தற்போது உள்ள நிலையில் காச நோய்க்கு மருத்துவ மனையிலேயே இருந்து சிகிச்சை பெற வேண்டும் என்ற அவசியம் இல்லை என்று மருத்துவ நிபுணர்கள் கருதுகிறார்கள்.

திரு. டி. மார்டின் : அவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்துக்கொண்டிருக்கிற கைதிகளில் சிலர் காச நோயினால் அவதிப்படுகின்றார்கள். அவர்கள் சென்னை அருகிலுள்ள காச நோய் ஆஸ்பத்திரிக்கு வரும்போது, அவர்களைச் சரியான முறையில் குணப்படுத்தாத முறையில், திரும்ப அவர்களைச் சிறைச்சாலைக்கு அனுப்பிவிடுகிறார்கள் என்ற நிலைமை இருப்பதுபற்றி இந்த அரசு கவனம் செலுத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படியொரு நிலைமை இருப்பதாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. கனம் உறுப்பினர் குறிப்பிட்ட ஏதாவது ஒரு நிலைமை இருக்குமானால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

Madras Public Buildings (Licensing) Act

* 89 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government had made it obligatory on the part of the owners of the existing public buildings to take out licences under the Madras Public Buildings (Licensing) Act, 1965; and

(*b*) if so, by which date?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) 1—4—1969 முதல். இதற்கான விண்ணப்பங்களை 1—4—1968-க்கு முன்பு அனுப்பிவிட வேண்டும்.

THIRU K. VINAYAKAM : Sir, under this Act it is obligatory on the part of the owners of buildings to take out a licence. So, will the Government come forward to make it a compulsory affair?

(No reply)

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, கட்டடங்கள் நல்ல முறையில் அமைந்து பாதுகாப்பாக இருக்கவும், தொழில் நடத்துவதற்குரிய முறையில் அமைந்திருக்கவும், மாவட்ட நகரமைப்பு விதிமுறைகளிலும், மாவட்ட சுகாதார பிரிவின் விதிமுறைகளிலும் போதுமான நிபந்தனைகள் இருக்கின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவ்வப்போது மாராமத்து செய்யும் போது, கட்டடங்களைப் பார்வையிட்டு, தகுந்த நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். அவ்வாறிருக்க, அதே நோக்கத்திற்காக இந்தப் புதிய சட்டம் தேவையில்லை என நான் கருதுகிறேன். இந்தப் புதிய சட்டம் அமலுக்கு வருமானால், சிறிய கடைக்காரர்கள் பலவிதத் தொந்தரவுகளுக்கு உள்ளாவார்கள். அரசாங்க அதிகாரிகளின் தலையீடுகள் அவசியமற்ற முறையில் அதிகமாகும். ஆகவே, பொதுமக்களின் ஒருமித்த நன்மையைக் கருதி இந்தச் சட்டத்தைக் கைவிட அரசு ஆலோசிக்குமா ?